රෙජිස්ට්‍රාර්/අධ්‍යක්ෂ ජනරාල්
பணிப்பாளர் நாயகம்/பதிவாளர்
Director Genaral/Registrar 011-2864483

අධ්‍යක්ෂ
பணிப்பாளர்
Director 011-2888424

සහකාර අධ්‍යක්ෂ
உதவி பணிப்பாளர்
Asst. Director 011-2884612

කාර්යාලය
அலுவலகம்
Office 011 -2877376

ෆැක්ස් :
தொலை நகல்
Fax 011-2884612

මහජන ආරක්ෂක අමාත්‍යාංශය
பொதுமக்கள் பாதுகாப்புஅமைச்சு
Ministry of Public Security

රාජ්‍ය නොවන සංවිධාන පිළිබඳ ජාතික ලේකම් කාර්යාලය-14 වන මහල, සුහුරුපාය, බත්තරමුල්ල.
அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகம் - 14ஆம் மாடி, சுருறுபாய, பத்தரமுல்ல.
National Secretariat for Non-governmental Organizations - 14th Floor, Suhurupaya, Battaramulla.

විදුලි තැපැල්මින் அஞ்சல்E-mail:ngosecretariat.gov@gmail.com

මගේඅංකය
எனதுஇல.
My No. VSSO/NGO/VISA In/Circular

මගේඅංකය
உமதுஇல.
Your No.

දිනය
திகதி
Date

பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதானிகளுக்கானது

<u>அரச சார்பற்ற நிறுவனங்களினது சேவைக்கு வருகை தருகின்ற வெளிநாட்டவர்களுக்காக வீசா பரிந்துரை செய்தல்</u>

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பிலான தேசிய செயலகத்தினால் வீசா பரிந்துரை செய்யப்படலானது இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மாத்திரமே ஆகும். மேலும் சில வணிக வீசா வகை (Business Visa) மற்றும் சுற்றுலா வீசா (Tourist Visa) மூலமாக அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வரும் வெளிநாட்டவர்களின் வீசா நீடிப்பதற்கான பரிந்துரை வழங்கல் இவ்வலுவலகத்தினால் மேற்கொள்ளப்படமாட்டாது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தேசிய செயலகத்தில் பதிவு செய்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வீசா பரிந்துரைகளை வழங்குவதற்கான பொறிமுறை

1. வீசா வகை
   I. நுழைவு வீசா (Entry Visa)
      a. குறுங்கால பிரவேச வீசா (Short Term)
         ஒரு மாதத்திற்கு குறைவான காலத்திற்காக இவ்வீசா பரிந்துரை வழங்கப்படுகின்றது.

      b. நுழைவு வீசா (Entry Visa/ prior Visa)
         நாட்டுக்கு வருகை தந்த நாள் தொடக்கம் ஒரு மாத காலம் வீசா பரிந்துரை வழங்கப்படுகின்றது.

   II. வதிவிட வீசா (Residence Visa)
      நுழைவு வீசா நிறைவடைந்ததன் பின்னர் ஒரு வருட காலத்திற்காக இவ்வீசா பரிந்துரை வழங்கப்படுகின்றது.

2. வீசா கோரிக்கை மற்றும் தேவையான ஆவணங்கள் உரிய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஊடாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3. வீசா பரிந்துரை வழங்குகையில் நிறுவனத்தின் முன்னேற்ற அறிக்கை, செயற்பாட்டு திட்டமிடல், நிறுவனத்தின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களடங்கிய அறிக்கை, பணிக்குழாத்தினரது விபரங்கள், சொத்துக்கள் தொடர்பான அறிக்கை மற்றம் நிதி கையாளுகை அறிக்கை போன்றன அமைப்பினால் எமது அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து அறிக்கைகளையும் வழங்கியுள்ள பணிபுரியும் வெளிநாட்டவர்களுக்கு மாத்திரம் 12 மாத காலத்திற்கோ அல்லது பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானம் எடுக்கக்கூடிய போதுமான காலப்பகுதிக்கோ வீசா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அமைப்பில் பணியாற்றும் வெளிநாட்டவர்களது சேவைக்காலம் 03 வருடங்கள் நிறைவு பெற்ற பின்னர் தொடர்ந்தும் அவர்களது சேவை அவசியத்தன்மை தொடர்பில் அமைப்பினால் தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது அனுமதியின் அடிப்படையில் மேலும் ஒரு வருட காலத்திற்கு வீசா பரிந்துரையை வழங்க முடியும்.

வீசா பரிந்துரை வழங்குகையில் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களை முன்வைத்தல் கட்டாயமானது.

இல	ஆவணங்களின் தன்மை	வேலை அனுமதி (Work Permit)	குறுங்கால பிரவேச வீசா (Short Term Entry Visa)	நுழைவு வீசா (Entry Visa)	வதிவிட வீசா (Residence Visa)	வேலை அனுமதி பத்திர நீடிப்பு வீசா (Extension of Work Permit)	வதிவிட வீசா நீடிப்பு (Extension of Residence Visa)
01	கோரிக்கை கடிதம்	√	√	√	√	√	√
02	இரண்டு விண்ணப்பபடிவங்கள் (வீசா வேலை/ அனுமதிபத்திரம்)	√	-	√	√	√	√
03	வெளிநாட்டு கடவுச்சீட்டின் பிரதி	√	√	√	√	√	√

04.	இறுதி வீசா பக்கத்தின் பிரதி	-	-	-	√	√	√
05	பொலிஸ் சான்றிதழ்	√	-	√	-	-	-
06	சுய விபர தரவு	-	-	√	-	-	-
07.	கல்விச்சான்றிதழ்களின் பிரதிகள்	-	-	√	-	-	-
08.	நியமன கடிதம்/நீடிப்பு கடிதம் /அழைப்பு கடிதம்	-	√	√	-	-	√
09	வெளிநாட்டு கடவுச்சீட்டு அளவான புகைப்படம் 3	-	-	√			
10.	வேலை கால அட்டவணை	-	√	√	-	-	-
11.	திருமணசான்றிதழ் மற்றும் பிறப்புசான்றிதழ்(தங்கி வாழ்வோர் உட்பட)	-	-	√			
12.	செயற்பாட்டு திட்டம்/முன்னேற்ற அறிக்கையை முன்வைப்பதனை உறுதிப்படுத்தல்	-	-	√	-	√	√

கவனத்திற்கொள்க: குறுங்கால பிரவேச வீசா வழங்கப்படலானது கல்வி, கருத்தரங்குகள் அல்லது மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகளுக்காக இந்நாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டவர்களுக்காகும். அதற்காக கோரிக்கை கடிதம், கடவுச்சீட்டின் பிரதி, நியமனக்கடிதம் / அழைப்புக்கடிதம் மற்றும் வேலை கால அட்டவணை முன்வைத்தல் போதுமானது. இதற்கிணங்க வீசா விண்ணப்பித்தல் www.eta.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக நிகழ்நிலை முறை மூலம் (Online) மேற்கொள்ள குடிவரவு குடியகழ்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க வீசா விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்கள் தொடர்பிலான தரவுகள் இச்செயலகத்தினால் குடிவரவு குடியகழ்வு திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

5. அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள குறித்த ஆவணங்கள் பரீசிலிக்கப்பட்ட பின்னர் குறுங்கால வீசா தவிர்த்து ஏனைய வீசாக்களுக்கான பரிந்துரை வழங்கப்படலுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் சான்றுப்படுத்தல் அறிக்கை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சான்றுப்படுத்தல் அறிக்கை கிடைக்கும்வரை வீசா பரிந்துரை வழங்கப்படமாட்டாது.

6. இருப்பினும் பாதுகாப்பு சான்றுப்படுத்தல் அறிக்கை கிடைக்கும் வரை வீசா முடிவுற்றமையினால் வெளிநாட்டவர் உட்படும் சிரமத்தை கவனத்திற்கொண்டு முன்னர் உள்ள சான்றுப்படுத்தல் அறிக்கையை அடிப்படையாக கொண்டு எதிர்வரும் 02 மாதங்களை விஞ்சாத காலத்திற்காகவும், பாதுகாப்பு சான்றுப்படுத்தல் அறிக்கை கிடைத்த பின்னர் எதிர்வரும் காலத்திற்கான வீசா பரிந்துரை வழங்கப்படும்.

சஞ்சீவ விமலகுணரத்ன
பணிப்பாளர் நாயகம் / பதிவாளர்

பிரதிகள் ;- 1. செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

2. கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு குடியகழ்வு திணைக்களம்

3. அனைத்து மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்